சார்பு நீதிமன்றம், மேலூர்

OS No. 2/2024

பெயர் : பொன்னுசாமி

தகப்பனார் பெயர் : சின்னன்

கணவர் பெயர் :

வயது :52

கிராமம் :ஐயாபட்டி, கொட்டாம்பட்டி

வட்டம் :மேலூர்

தொழில் :விவசாயம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

29.04.2025

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். பட்டா எண்.1018, ஐயாபட்டி கிராமத்திற்குரிய பட்டா வா.சா.ஆ.1. 08.09.2015 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட ஒத்தி பத்திரம் வா.சா.ஆ.2. 12.09.2022 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட ஒத்தி பத்திரம் வா.சா.ஆ.3. வழக்கு சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.4. என் தந்தை சின்னனின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.5. என் தந்தை சின்னனின் வாரிசுதாரர் சான்றிதழ் வா.சா.ஆ.6. எங்கள் வழக்கறிஞர் 16.08.2023 தேதியில் பிரதிவாதிக்கு கொடுத்துள்ள வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் ரசீது வா.சா.ஆ.7. அதை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.8. 24.08.2023 தேதியிட்ட வழக்கறிஞர் ரீஜாயிண்டர் நோட்டிஸ் வா.சா.ஆ.9. மேற்படி

அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.10.

(குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.04.29 20:01:47 +0530

Sub Judge

Melur